தினமலர் 14.08.2025

# புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க நிதி

## காகித ஆலை வழங்கல்

**வேலாயுதம்பாளையம்:** புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் உயர்மின் கோபுர விளக்கு அமைப்பதற்காக தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் ரூ.14 லட்சத்து 70 ஆயிரம் நிதி வழ்ங்கி உள்ளது. தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனம் தனது சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நிறுவனத்தைச் சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சை புகழூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும், உட்கட்டமைப்பை மேம்படுத்திடவும் பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உயர் மின்கோபுர விளக்குகள் அமைப்பதற்காக காகித நிறுவனம் ரூ.14 லட்சத்து 70 ஆயிரம் நிதி வழங்கி உள்ளது. அதற்கான காசோலையை புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபாவிடம் காகித ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன், வழங்கினார்.



தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக ரூ.14 லட்சத்து 70 ஆயிரத்திற்கான காசோலையை புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி தலைவர் ரூபாவிடம் காகித ஆலை நிறுவன பொது மேலாளர் கலைச்செல்வன் வழங்கினார்.

மாலை மலர் 14.08.2025



புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் உயர்மின் கோபுர விளக்கு அமைக்க ரூ.14.70 லட்சத்துகாண காசோலையை டி.என்.பி.எல். நிறுவனம் வழங்கிய போது எடுத்த படம்.

# உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்க டி.என்.பி.எல். ரூ.14 .70 லட்சம் நிதி

வேலாயுதம்பாளையம், ஆக.14— தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் தனது சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிறுவனத்தை சுற்றி அமைந்துள்ள புகழூர் நகராட்சி, புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சி மற்றும் திருக்காடுதுறை, வேட்டமங்கலம், புன்னம், கோம்புபாளையம், நஞ்சை புகளூர் ஆகிய ஊராட்சி பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கும். உட்கட்டமைப்பினை மேம்படுத்தி டவும். பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

அந்தவகையில், புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உயர் மின் கோபுர விளக்குகள் அமைப்பதற்காக காகித நிறுவனம் ரூ.14 லட்சத்து 70 ஆயிரம் நிதி வழங்கி உள்ளது. அதற்கான காசோலையை காகித ஆலையின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூராட்சித் தலைவர் ரூபாவிடம் வழங்கினார்.